www.agaram.lk

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 8 | செயன்முறைத் தொழினுட்பத்திறன் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

*** சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. திட்டமிட்ட முறையில் வீட்டுத்தோட்டம் அமைப்பதனால் கிடைக்கும் நன்மை அல்லாதது.
    1. நஞ்சற்ற மரக்கறிகள் கிடைக்கும்
    2. மனமகிழ்ச்சி குறையும்
    3. உடற்பயிற்சி கிடைக்கும்
    4. போசாக்குத் தேவை பூர்த்தி செய்யப்படும்

02. மண்ணீர்க் காப்பிற்கு பொருத்தமான நீர்ப்பாசன முறை
    1. வரம்புசால் நீர்ப்பாசனம் 2. துளிமுறை நீர்ப்பாசனம்
    3. வாய்க்கால் முறை 4. மேற்கூறிய யாவும்

03. பூச்சிகளுக்கு வெறுப்பூட்டும் பயிராக அமையாதது.
    1. செவ்வந்தி 2. மல்லிகை 3. இஞ்சி 4. சேரைப்புல்

04. வழங்குநர்களினால் நுகர்வோரின் தேவைகள் விருப்பங்களை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பம்
    1. சந்தை ஆய்வு 2. சந்தைப் பரிசீலனை
    3. சந்தை இடைவெளி 4 வணிக நடவடிக்கை

05. நேரடியாகவே தோட்டத்தில் நாட்டக்கூடிய பயிர்வகை
    1. கத்தரி, தக்காளி 2. மிளகாய், கத்தரி
    3. வெண்டி, பூசணி 4. தக்காளி, மிளகாய்

06. பயிர்ச்செய்கை கோபுரம் அமைக்கப் பயன்படுத்தப்படும் நடுகை ஊடகம்.
    1. மேல்மணி, களிமண் 2. மேல்மண், கூட்டெரு
    3. கூட்டெரு மணல்மண் 4. மணல்மண், மேல்மண்

07. சர்வதேச வியாபாரமானது இடம் பெறுவது.
    1. விளம்பரதாரர் ஊடாக 2. வலையமைப்பினூடாக
    3. சிற்றளவு வணிகங்களுடாக 4. சந்தைகளினூடாக

08. போகப்பயிர் என அழைக்கப்படுவது.
    1. நீண்டகாலப்பயிர் 2. குறுங்காலப்பயிர்
    3. வீட்டுத்தோட்டம் 4. மேற்கூறிய யாவும்

09. வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய உயிர்ப்பல்வகைமை உடைய சூழற் தொகுதி பின்வருவனவற்றுள் எது?
    1. வணிகம் 2. நிலம் 3. வீட்டுத்தோட்டம் 4. உணவு

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

10. கோபுரப் பயிர்ச்செய்கையில் கீழ்ப்பாகத்தில் நாட்டுவதற்குப் பொருத்தமான பயிர்
    1. கத்தரி 2. மிளகாய் 3. பயற்றை 4. யாவும் சரி

**11 – 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து எழுதுக.**

வினாகிரி, வைக்கோலால் மூடுபடை இடுதல், அரக்கு, ஐதரசன் சயனைட்டு, நிழலை விரும்பும் பயிர்களை நாட்டுதல்

11. நீர்ப்பற்றாக்குறைக்கான தீர்வாக ……………………… அமையும்.

12. வெட்டிய மரவள்ளி கிழங்கை வளிபடுமாறு வைத்தால் ……………………… உருவாகும்.

13. அச்சாறு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நற்காப்புப் பொருள் …………………….. ஆகும்.

14. நிலத்திற்குப் போதியளவு சூரியஒளி கிடைக்காமைக்கு ………………………தீர்வாகும்.

15. பலகையிலான பொருள்களுக்குப் பின்னரான மினுக்கி பதார்த்தமாக …………………….. பயன்படுத்தப்டுகிறது.

**16 – 20 வரையான வினாக்களுக்கு சரி பிழை இடுக**

16. மண்ணரிப்பைத் தடுக்க மூடுபயிர் வளர்க்கலாம். ( )

17. சுத்தமான ஆடை அணிதல் உணவு தயாரிப்பவரின் ஆரோக்கியத்தில் அடங்கும் ( )

18. பற்றீரியா, பங்கசு உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீகக் காரணியாகும். ( )

19. இடப்பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களுக்கு நிலைக்குத்துப் பயிர்ச்செய்கை உகந்ததாகும். ( )

20. வீட்டு உபகரணங்களோடு உபகரணப்பாவனை தொடர்பான தகவல்களை அறிய அறிவுறுத்தற்கையேடு வழங்கப்படுகிறது. ( )

(1 x 20 = 20 புள்ளிகள்)



agaram.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

(01)
1. முதலாம் தவணையில் நீர் மேற்கொண்ட செயன்முறைச் செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
2. அச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்திய பொருட்கள், கருவி உபகரணங்களை குறிப்பிடுக.
3. அச்செயற்பாட்டின் போது தோன்றிய பிரச்சினைகள், தடைகளைக் குறிப்பிடுக.
4. அச் செயற்பாட்டிற்கு உதவி புரிந்தவர்களைக் குறிப்பிடுக.
5. அச் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களைத் தருக.

(2 + 2 + 2 + 2 + 2 = 10 புள்ளிகள்)

(02)
1. திட்டமிட்ட முறையில் வீட்டுத்தோட்டம் அமைப்பதால் கிடைக்கும் பயன்கள் 4 தருக?
2. வீட்டுத்தோட்டத்தில் ஏற்படும் பீடைத்தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 4 தருக?
3. நிலைக்குத்துப் பயிர்ச்செய்கை முறைகள் 2 தருக?

(3+ 3+ 4 = 10 புள்ளிகள்)

(03)
1. பழுதடைந்த உணவு என்றால் என்ன?
2. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகள் எவை?
3. பழுதடைந்த உணவில் காணப்படத்தக்க இயல்புகள் 4 தருக?

(3+ 3+ 4 = 10 புள்ளிகள்)

(04)
1. உராய்வு நீக்கியாகப் பயன்படுத்தக்கூடிய பதார்த்தங்கள் 2 தருக?
2. வீட்டில் மின் உபகரணங்களைப் பயன்படுத்தும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக?
3. துவிச்சக்கர வண்டி ஒன்றின் படம் வரைந்து இயங்கும் பகுதிகளைப் குறிப்பிடுக?

(3+ 3+ 4 = 10 புள்ளிகள்)

(05)
1. வணிகம் என்றால் என்ன?
2. சந்தையொன்று உள்ளடக்கியதாகக் காணப்பட வேண்டிய 3 விடயங்களும் எவை?
3. வணிகமொன்றை ஆரம்பிக்கும் ஒருவர் சூழல் நேயமாகப் பின்பற்றக்கூடிய நடைமுறைகள் 4 தருக.

(3+ 3+ 4 = 10 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk